**கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபை - 2023**
---------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கிழக்கு நுகரகம்பலாத்த பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கிழக்கு நுகரகம்பலாத்த பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | துருளிய செவன உல்லாச விடுதியில் இருந்த சோபா மீளாய்வாண்டில் ரூபா. 45,000 செலவில் பழுதுபார்க்கப்பட்டிருந்த போதிலும் அது சபையின் சொத்தாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | சூரிய சக்தி ஒழுங்கமைப்பிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா. 583,860 ஆன வருமானம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது விரிவான வருமானக் கூற்றில் ரூபா. 492,990 எனக் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | - மேற்படி - | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டுக்குரிய நிலையான வைப்பு வட்டி ரூபா. 1,417,871 ஆன போதிலும் விரிவான வருமானக் கூற்றில் அது ரூபா. 1,206,602 எனக் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டுக்கு உரிய பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய ரூபா. 1,395,212 ஆன வேறு நிலையான வைப்பு வட்டியும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய வருமானமாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் களஞ்சியசாலை ஏடுகளுக்கு அமைய வீதி விளக்கு இருப்பின் பெறுமதி ரூபா. 154,315 ஆன போதிலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது ரூபா. 132,115 எனக் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவு அல்லாதவைக்கு அரசாங்கத்தினால் செய்யப்பட்ட மாற்றல்கள் விரிவான வருமானக் கூற்றுக்கு அமைய ரூபா. 7,784,039 ஆனபோதிலும் குறிப்பு இலக்கம் 05 இற்கு அமைய அது ரூபா. 7,247,418 ஆனதால் ரூபா. 536,621 வித்தியாசம் ஏற்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | அட்டவணைகள் நேரொத்த அறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுக்கு அமைய மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய நீதிமன்ற தண்டம் ரூபா. 8,600,360 ஆன போதிலும் அட்டவணைக்கு அமைய அது ரூபா. 6,767,684 ஆனதனால் ரூபா. 1,832,676 வித்தியாசம் ஏற்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை**

| | விடயம் | தொகை<br>ரூபா | வழங்க்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | குழாய் கிணறு உதிரிப் பாகங்கள் இருப்பு | 58,034 | இருப்பு ஏடு பேணப்பட்டு வந்திருக்காமை | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | உறுதிப்படுத்தப்பட்ட எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் | 22,436,908 | ஏடுகள் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வந்திருக்காமை | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | வீதிகள் மற்றும் சாக்கடைகள் | 10,277,416 | விரிவான அட்டவணைகள் | - மேற்படி - | - மேற்படி - |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா.3,079,423 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா.17,445,266 ஆகும்.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொழிற்சாலை நடைமுறைக் கணக்கிவ் மீளாய்வாண்டின் சனவரி முதல் திசெம்பர் வரையான மாதங்களுக்கு ரூபா 10,000,000 இற்கு மேற்பட்ட மீதியொன்று பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன், அந்த பணம் | கருத்து தெரிவிக்கப்படவில்லை என்பது. | மிகைப் பணம் முதலீடு செய்யப்பட வேண்டும். |

சபைக்கு வருமானம் ஈட்டப்படும் முதலீடொன்றில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களுக்கு அமைய மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிட ப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை |
| | -------- | -------- | -------- | -------- | -------- | -------- | -------- | -------- | -------- |
| | | **ரூபாய்.** | **ரூபாய்.** | **ரூபாய்.** | **ரூபாய்.** | **ரூபாய்.** | **ரூபாய்.** | **ரூபாய்.** | **ரூபாய்.** |
| (i) | வீத வரி மற்றும் வரி | 3,016,000 | 2,429,497 | 2,472,847 | 826,770 | 3,437,000 | 2,436,695 | 1,891,095 | 870,120 |
| (ii) | வாடகை | 14,594,690 | 3,675,830 | 3,640,971 | 1,431,836 | 10,428,000 | 4,848,201 | 5,124,094 | 1,396,977 |
| (iii) | அனுமதி பத்திர கட்டணம் | 1,450,000 | 1,503,966 | 1,445,767 | 1,176,263 | 1,565,000 | 1,128,544 | 1,440,705 | 1,118,064 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 38,240,400 | 34,812,231 | 35,308,195 | 44,417,423 | 30,765,620 | 26,517,423 | 35,679,398 | 44,913,387 |
| | | --------------- | -------------- | -------------- | --------------- | --------------- | ------------- | ------------- | ------------- |
| | | 57,301,090 | 42,421,524 | 42,867,780 | 47,852,292 | 46,195,620 | 34,930,863 | 44,135,292 | 48,298,548 |
| | | ========= | ======== | ======== | ========= | ========= | ======= | ======== | ======= |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார பிரதேசத்தில் இருக்கும் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை இனம் கண்டு வர்த்தமானியில் பிரசுரித்து வீத வரியினை அமுல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை என்பது. | வீதவரி அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | பிரதேச சபைக்குச் சொந்தமான 09 கடைகள் மற்றும் 08 குத்தகைக்கு கொடுக்கக்கூடிய சொத்துக்கள் என்பன 2023 ஆம் ஆண்டு செயலற்று காணப்பட்டதனால் அதற்காகப் பெற்றுக் கொள்ள கூடியதாக இருந்த அறவிடக் கூடிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | சொத்துக்களை உற்பத்தித் திறனான நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் ரூபா.1,227,589 ஆன நிலுவை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிலுவை வாடகை அறவிடப்படுதல் வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டுக்குரிய கடை வாடகை பட்டியலிடல் ரூபா.522,100 ஆக உள்ளதுடன் அதில் 22 சதவீதமான ரூபா.113,500 அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் நிலுவை கடை வாடகை ரூபா.44,000 உம் மற்றும் நிலுவை வாகன வாடகை ரூபா.31,190 உம் மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | -மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| **(இ)** | **அனுமதி பத்திர கட்டணம்**<br>சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்ட 05 ஹோட்டல்களின் வருமானத்திற்கு அமைய அறவிடப்பட வேண்டிய 01 சதவீத அனுமதிப் பத்திர கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்களை இனம் கண்டு அனுமதிப் பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஈ)** | **ஏனைய வருமானங்கள்**<br>மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்து 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டி இருந்த நீதிமன்ற தண்டம் ரூபா. 8,600,360 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா. 22,436,908 உம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது நெடுஞ்சாலைகள் மற்றும் கிளை வீதிகள் தொடர்பான காரணிகளை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், மக்களின் நன் நடத்தை, வசதிகள் மற்றும் நலன் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டி இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகார சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணைச் சட்டங்களை இயற்றக்கூடியதாக இருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த விடயங்களுக்காக துணைச் சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை என்பது. | துணைச் சட்டங்களை இயற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான பொருட்கள் கணிப்பாய்வில் போன்றே 2023 ஆம் ஆண்டு பொருட்கள் கணிப்பாய்வில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த சபையின் சொத்துக்களின் குறைபாடு தொடர்பில் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை என்பது. | சொத்து குறைபாடுகள் தொடர்பில் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | அதிகார பிரதேசத்தில் இடம்பெற்றிருந்ததாக முறைப்பாடு கிடைத்திருந்த அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காதுடன், அது தொடர்பான விபரங்கள் குறிப்பிடப்பட்ட ஆவணங்களும் சபையினால் பேணி வரப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை என்பது. | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் வருமானத்தை உருவாக்குவதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட பிளொக் கல் உற்பத்தி இயந்திரம், வாகன சேவை மத்திய நிலையம் மற்றும் கவரகுளம் கடைத் தொகுதியில் உள்ள 08 கடைகள் என்பன அந்த குறித்த நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்படாது செயலற்று காணப்படுகின்றது. | கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை என்பது. | சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டு வருமானத்தினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1. வருடாந்த செயல் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நீதிமன்ற தண்டம் மற்றும் முத்திரைக் கட்டணங்களாக ரூபா. 21,569,395 கிடைத்திருந்த போதிலும் 1987 இன் 18 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் III | கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை என்பது. | இந்தத் தொகையினை ஈடுபடுத்தி அதிகார பிரதேசத்தில் அத்தியாவசியமான பராமரிப்பு நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| ஆவது பகுதியில் 2 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார பிரதேசத்தில் சேதமடைந்த வீதிகளைப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 4.2. சுற்றாடல் பிரச்சினைகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சபையின் அதிகார பிரதேசத்தில் சேகரிக்கப்படும் உக்காத கழிவுகளை அகற்றுவதற்கு முறையான வழிவகை தயாரிக்கப்பட்டிருக்காததால் சபை வளாகத்தில் சுற்றாடலுக்கு கேடு விளைவிக்கும் வகையில் கழிவுகளுக்கு தீ மூட்டுதல் மற்றும் சேகரித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை என்பது. | கழிவுகளை முறையாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |